439 வினா—திரு. எஸ். அக்னிராஜு : மாண்புமிகு பொதுச் சுகாதார அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

மதுரை, திருப்பரங்குன்றத்திற்குக் குடி தண்ணீர் வசதி அளிப்பதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : திருப்பரங்குன்றத்திற்குக் குடி தண்ணீர் வழங்குவதற்கான திட்டம் ஒன்றும் இல்லை.

திரு. எஸ். அக்னிராஜு : தலைவர் அவர்களே, திருப்பரங்குன்றம் ஒரு முக்கியமான யாத்திரிகர் ஸ்தலம். வாரத்தில் இரண்டு முறை ஆயிரக்கணக்கானவர்கள் அங்கே சென்றுக் கொண்டு வருகிறார்கள். அந்தக் கோயிலுக்கு வருஷமொன்றிற்கு ஆறு இலட்ச ரூபாய் வருமானம் இருந்தும், அதை மதுரை தேவஸ்தானத்தோடு சேர்த்துக்கொண்டிருப்பதால், அங்கே எந்தவிதமான வசதியும் இதுவரை செய்துகொடுக்கப்படவில்லை. ஆகவே, உடனடியாக தனிப்பட்ட கவனம் செலுத்தி அதற்கு ஏதாவது வசதி செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : ஊராட்சி மன்றங்கள்அவைகளின் எல்லைக்குட்பட்ட இடங்களுக்குத் தண்ணீர் வசதி செய்து தரவேண்டும் என்று விதி இருக்கிறது. அந்த வகையில் அந்த ஊராட்சி மன்றத்தின் தலைவர் அவர்கள் அரசாங்கத்தைக்கூடப் பல முறை நாடியிருக்கிறார்கள். ஆனால், அரசாங்கம் அதற்கு எந்தவிதமான திட்டமும் எடுத்துக்கொள்ளவில்லை. இப்பொழுது ஒரு கோடி ரூபாய் செலவழித்து 31 திட்டங்களை எடுத்துக்கொண்டு இருக்கிறது என்றாலும், அந்த 31 திட்டங்களில் திருப்பரங்குன்றம் பஞ்சாயத்துக் குடி தண்ணீர்த் திட்டம் சேர்க்கப்படவில்லை. அடுத்து இதைப்பற்றி யோசிக்கலாம் என்று கூடக் கூற விரும்புகிறேன்.

திரு. சொ. கோவிந்தராசன் : தலைவர் அவர்களே, வைகை என்று இருந்தும், கை வைத்தாலும் தண்ணீர் இல்லை. மண்வெட்டி வைத்து வெட்டினாலும் தண்ணீர் கிடைக்காத நிலை இன்று ஏற்பட்டிருக்கிறது மதுரையில். அது அமைச்சர் அவர்களுக்குத் தெரியும் என்று எண்ணுகிறேன். இரயிலில் போகும்போது பார்த்தாலே தெரியும். அந்த அளவிலே மதுரையில் தண்ணீர்ப் பஞ்சம் இருக்கிறது. அதற்கு உடனடியாக நிவாரணம் செய்ய உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : வைகையில் கனம் உறுப்பினர் கை வைத்தால் உள்ளபடியே தண்ணீர் வருமோ என்னவோ தெரியாது. ஆனால், பொதுவாகவே, மதுரை நகரம், அதைச் சுற்றியுள்ள பகுதிகள், இவை அனைத்துக்கும் தண்ணீர் தர வேண்டும் என்ற வகையில் மதுரைக்கு ஐம்பது இலட்ச ரூபாய் செலவில் திட்டம் தயாரிக்க வேண்டும் என்று மதுரை நகராட்சித் தலைவர் கேட்டிருக்கிறார்கள். ஆனால், எந்த வகை என்று செயற்குறிப்பை அவர் அனுப்பவில்லை. சென்னைக்கு வருமாறு தந்தி மூலமாக அவரை அழைத்திருக்கிறேன். அவர் இன்றோ நாளையோ வருவார். வந்த பிறகு, எப்படி மதுரைக்குத் தண்ணீர் கொடுக்கின்றது என்கிற திட்டத்தை ஆலோசிக்கலாம். கிணறுகள் வெட்டி தண்ணீர் எடுக்கலாமா, அல்லது ஆற்றிலிருந்து தண்ணீர் எடுக்கலாமா என்பதைக் குறித்து அவர்கள் ஆலோசனை தெரிவித்தால், அதைக் குறித்து அரசாங்கம் பரிசீலனை செய்து, சுற்றுப்புறங்களில் இருக்கும் இடங்களுக்குக் கூட தண்ணீர் கொடுக்கக் கூடிய முறைகளை எல்லாம் அரசாங்கம் கவனிக்கும்.

திரு. எஸ். அக்னிராஜு : திருப்பரங்குன்றத்தில் உள்ள தேவஸ்தானத்திற்கு வருஷத்திற்கு ஆறு லட்சம் ரூபாய் வருமானம் வருகிறது. தேவஸ்தான நிதியிலிருந்து குடி தண்ணீர்த் திட்டத்தை நிறைவேற்ற அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா ?